நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 194 /2023

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பூபதி |
| கிராமம் | : | குள்ளமடையனூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 14–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.13PM

1. நான் தற்போது மேட்டூர் வட்டம் குள்ளம்மடையானூர் அஞ்சல் சாவடியூரில் குடியிருக்கிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்கிறேன்.ஆஜர் எதிரிகள் 3 பேரும் விருதாசம்பட்டி பஞ்சாயத்தில் குடியிருந்து வருகிறார்கள். சுமார் 4வருடங்களுக்கு முன்பாக காலை 9.00 மணிஅளவில் செங்கரடு என்ற

இடத்தில் லோடு இறக்கிவிட்டு முனியப்பன் கோவில் அருகே வந்திருந்தேன். அப்போது அங்கே பொன்னுசாமி தரப்பில் 4பேரும், தேவகி தரப்பில் இருவரும் சண்டை போட்டு கொண்டிருந்தனர்.

2. அப்போது பொன்னுசாமி என்பவர் அரிவாளால் தேவகியை வெட்டினார். தேவகிக்கு வலலு ஆள்காட்டி விரலில் வெட்டு காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த ஆட்டோ டிரைவர் சண்முகத்திடம் தேவகியின் மகன் செங்கோடனின் தொலைபேசி எண் இருந்தது.அதன் மூலம் செங்கோடனுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். செங்கோடன் சிமெண்ட் கடை வைத்திருப்பதாலும், சண்முகம் ஆட்டோ டிரைவர் என்பதாலும் அவர்கள் இருவருக்கும் பழக்கம் இருந்துள்ளதால் செங்கோடனின் தொலைபேசி எண் சண்முகத்திடம் இருந்தது. தேவகியின்வீட்டுக்காரர் கீழே படுத்திருந்தார்.
3. தேவகியின் விவசாய நிலத்தில் தான் இந்த சண்டை நடந்து கொண்டிருந்தது. பின்னர் அடிப்பட்டவர்களை மருத்துவமனை அனுப்பி வைத்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. தேவகி என்பவர் உறவினரா என்றால் இல்லை. என்னுடைய தாத்தா கந்தன் எங்கு குடியிருக்கிறார் என்றால் பொட்டனேரி காட்டு வளவில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரி தேவகி என்னுடைய தாத்தா கந்தனின் தம்பி மனைவி என்றால் நான் 5 வயதில் இருந்தே தாத்தாவின் குடும்பத்திற்கு செல்வதில்லை. எனவே அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய குடும்பத்திற்கு என்னுடைய தாத்தாவின் குடும்பத்திற்கு தெரியும் என்றால் நான் நீதிமன்றத்திற்கு வந்ததே அவர்களுக்கு தெரியாது.
2. ஒரு பிரச்சினை நடக்கும்போது எதற்காக பிரச்சினை நடந்தது என்று கேட்பாமோ அல்லது அந்த பிரச்சினை நடந்தது யாருடைய நிலமா என்று கேட்பாமோ என்றால் எதற்காக பிரச்சினை நடந்து என்று தான் கேட்போம். தேவகி உறவினர்

என்பதால் தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலீசார் விசாரித்தபோது தான் நான் தெரிந்து கொண்டேன்.

3. கடந்த 25.06.2021ம் தேதி காலை 8.00 மணி அளவில் பொன்னுசாமி நிலத்தில் இருந்த மரங்களை ஆஜர் எதிரிகள் தேவகி அவரது மகன் செங்கோடன் ,மற்றும் பேரன் பிரகாஷ் என்கிற ஜெயபிரகாஷ் ஆகிய மூவரும் வெட்டி கொண்டிருப்பதை பார்த்ததும் ஏன் மரங்களை வெட்டுகிறீர்கள் என்று பொன்னுசாமி கேட்டதாகவும், அதற்கு மூவரும் அப்படிதாண்டா வெட்டுவேன் என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், பின்னர் செங்கோடன் பொன்னுசாமியை பிடித்துகொள்ள ஜெயபிரகாஷ் கீழே இருந்த கட்டையை எடுத்து பொன்னுசாமியின் வலது மணிக்கட்டில் ரத்தக் காயத்தை ஏற்படுத்தியதை போலீசார் விசாணையில் சொல்லிவிட்டு தேவகி உறவினர் என்பதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக அந்த இடத்தில் சண்டை நடந்தது என்பதை மட்டும் சொல்லிவிட்டு பிறழ் சாட்சியாக மாறி பொன்னுசாமிதான் தேவகியை வெட்டினார் என்று பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சம்பவம் நடந்த இடத்தில் ஆஜர் எதிரிகள் செங்கோடன் மற்றும் ஜெயபிரகாஷ் இருவரும் இருந்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.41PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 194 /2023

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுதாகர் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | குள்ளமடையனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | 43 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 14–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.42PM

1. நான் தற்போது மேட்டுர் வட்டம் குள்ளமடையானூரில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்கிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பாக பொன்னுசாமி என்பவர் தேவகி என்பவரை அடித்துவிட்டதாக கேள்விபட்டேன். பின்னர் பிரச்சனை நடந்து மதியம் 12.30 லிருந்து 1.00 மணி அளவில் போலீசார் வந்து விசாரித்தனர்.

போலீசார் சாட்சி கையெழுத்து கேட்டனர். நானும், மகேந்திரன், அர்ச்சுணன் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ( பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. தேவகி தரப்பினரை எனக்கு முன்பே பழக்கம் என்றால் இல்லை. எனக்கு தேவகியை நன்றாக தெரியும் என்றாலும், 29.06.2021ம் தேதி மதியம் 1.00 மணி அளவில் பொன்னுசாமி என்பவரின் விவசாய நிலத்தின் அருகே பொன்னுசாமிக்கும் தேவகி தரப்பினருக்கும் இடையில் நடந்த சண்டை குறித்து விசாரித்தபோது உடன் இருந்ததாகவும், அப்போது போலீசார் என் முன்னால் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் பார்வை மகஜரில் நானும், அர்ச்சுனனும் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவம் நடந்தே அன்றே போலீசார் வந்து விசாரித்தாகவும், எதிரிகளை காப்பாற்ற பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.51PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 194 /2023

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோபி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 5** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 14–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.52PM

1. நான் தற்போது நங்கவள்ளி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 29.06.2021ம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்தபோது மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற இண்டிமேசனை பெற்று காவல் உதவி ஆய்வாளர் உத்தரவுப்படி மேட்டூர் அரசு

மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பொன்னுசாமி த/பெ மாரப்பன் கந்தனூர் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து வந்து காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் சமர்பித்தேன். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் 14.09.2021ம் தேதி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 26.09.2021ம் தேதி காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது. சுமார் மதியம் 1.00 மணிக்கு தகவல் வந்தது. அந்த இண்டிமேசனை நிலைய பாரா அலுவலர் பெற்று கொண்டார். அவரது பெயர் ஞாபகமில்லை. மதியம் 1.15 மணிக்கு எனக்கு தகவல் கொடுத்தார். அப்போது நான் நிலைய அலுவலில் தான் இருந்தேன். நான் சுமார் மதியம் 1.40 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன்.
2. 5 நிமிடத்தில் வாக்குமூலம் பதிவு செய்து முடித்துவிட்டேன். அதன் பின்னர் மதியம் 2 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றேன். மேட்டுர் அரசு மருத்துவமனையிலிருந்து நங்கவள்ளி காவல் நிலையத்திற்கு சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன்.
3. நான் வாக்குமூலம் பதிவு செய்து உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் செல்லும்போது உதவி ஆய்வாளர் மதியம் 2.00 மணிக்கு காவல் நிலையத்தில் தான் இருந்தார். நான் சொன்னவாறு இரு சக்கர வாகனத்தில் 15 கிலோமீட்டர் தூரத்தை 15 நிமிடத்தில் கடக்க முடியாது என்றாலும், நான் சொன்ன விவரங்கள் தவறு என்பதாலும், நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.05PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**